[1996 ஆகஸ்டு 5

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : ஜீவன்தாரா திட்டத்திற்கு . . ..

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : எந்தத் திட்டமாக இருந்தாலும் அதிலே கொடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மீ.அ. வைத்தியலிங்கம்.

திரு. மீ.அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு மின்சார இணைப்பு வழங்குவதிலே கடந்த கால ஆட்சி தரிசு நிலங்களில் இருப்பவர்களுக்கு வருவாய்த் துறை மூலமாக தடையில்லாச் சான்று கிடைத்தாலும் கொடுக்கக் கூடாது என்ற உத்தரவினை, போகிற போக்கில், ஏப்ரல் மாதம் அமல் செய்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? அந்தத் தடையாணையை ரத்து செய்யுமா எனத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தை கிராமப் பஞ்சாயத்திற்கு மட்டுமல்லாமல், பேரூராட்சிக்கும், மாநகராட்சிக்கும் விஸ்தரிப்பு செய்ய அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 75, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பத்மா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

75—

மின் தடை இல்லாமல் மின்சாரம் வழங்குதல்

*1041—**டாக்டர் பத்மா :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்டு 5]

தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களில் வேளாண்மைக் காலங்களில் மின் தடை இல்லாமல் வேளாண்மைக்கு நீர் இறைக்க மின்சாரம் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் உள்ள விவசாய பம்பு செட்டுகளுக்கு நாளொன்றுக்கு 20 மணி நேரத்திற்கு மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

டாக்டர் பத்மா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு 20 மணி நேரம் மின்சாரம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் நன்னிலத்தைப் பொறுத்தவரையில் 14 மணி நேரம்தான்-நேற்றுவரை-மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. மின்சாரம் குறைவாக சப்ளை செய்வதன் காரணத்தினால் பாதிப்பு ஏற்படுகிறது. எங்கள் பகுதி மிகவும் கடைமடைப் பகுதியாகும். தண்ணீர் வரத்து அதிகமாக உள்ள தஞ்சாவூருக்கு 20 மணி நேரமும், கடைமடைப் பகுதியான நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு 14 மணி நேரமும் மின்சாரம் சப்ளை செய்யப்படுவது ஏன் என்றும், நன்னிலத்திற்கு சப்-ஸ்டேஷன் அமைக்க அனுமதி அளித்தும், இன்றுவரை எந்தவித கட்டுமான வேலைகளும் நடைபெறவில்லை. அதற்கும் என்ன காரணம் என மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தஞ்சாவூர், நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் 20 மணி நேரம் மின்சாரம் விவசாயிகளுக்கு விநியோகிக்கவேண்டுமென்று ஆணையிட்டதற்கு அடிப்படைக் காரணமே காவிரியில் நீர்வரத்து வராத காரணத்தால் இப்போது பயிரிடப்பட்டிருக்கக் கூடிய குறுவைப் பயிர் பாழடைந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூட முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தார்கள். அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் முதல்வரிடத்திலே 20 மணி நேரம் மின்சாரம் வழங்கினால்தான் பயிரைப் பாதுகாக்கமுடியும் என்று எடுத்துச்சொன்னார்கள். அன்றே அந்த

உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 2 மாவட்டங்களில் 20 மணி நேரம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போன்று எங்காவது குறைபாடுகள் இருக்குமானால், இன்றே சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்புகொண்டு 20 மணிநேரம் கட்டாயம் மின்சாரம் வழங்கவேண்டுமென்று அறிவுறுத்தப்படும். நன்னிலத்தைப் பற்றிச் சொன்னார்கள், சப்-ஸ்டேஷன் கட்டுவதிலே காலதாமதம் என்று. அதையும் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எல். சந்தானம்.

திரு. எல். சந்தானம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதிகளிலே விவசாயம் பாதிக்கப்படக் கூடாது என்கின்ற நோக்கத்தோடு அவர்களுக்கு மட்டும் எந்தவித முன்னுரிமை இல்லாமல் 2500 பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதேபோல மதுரை மாவட்டம் பெரியாறு பாசனப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளும் இதுபோன்றே சாகுபடிக்கு சரியான நீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கும் முன்னுரிமை இல்லாமல் மின்சாரம் வழங்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தஞ்சை, நாகை மாவட்டங்களில் முன்னுரிமை இல்லாமல் மின்சாரம் வழங்கவில்லை. அங்கே பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் பதிவுசெய்து வைத்திருக்கிறார்கள். நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் அங்கே கருத்தரங்கிற்குச் சென்றபோது காவிரியில் நீர் வராத காரணத்தால் அந்த மாவட்டத்திற்கென்று ஒதுக்கியிருந்த மின் இணைப்புகளினுடைய எண்ணிக்கையை 10,000-ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10,000 இணைப்புகள் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2,500 என்று எண்ணிக்கையை உயர்த்தியிருக்கிறாரே தவிர, முன்னுரிமையைத் தடுக்கவில்லை. ஏற்கெனவே, விவசாயிகள் எந்த அடிப்படையில் பதிவு செய்திருக்கிறார்களோ அந்த முன்னுரிமையின் அடிப்படையில்தான் மின் இணைப்பு கொடுக்கப்படும். (குறுக்கீடு)

1996 ஆகஸ்டு 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விதான் நீங்கள் கேட்கவேண்டும். உட்காருங்கள். திரு. மா. இராமச்சந்திரன்.

திரு. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருக்காணூர்பட்டியில் *730* கிலோவாட் மின்சார நிலையம் இருக்கிறது. துவக்க வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இது முடிந்துவிட்டாலே அந்த இரண்டு மாவட்டங்களிலுள்ள மின்சாரத் தட்டுப்பாடு நீங்கிவிடும். ஆகவே, அந்த மின்சார நிலையத்தை விரிவாக்க ஏற்பாடு செய்ய, அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு, இரவு பகல் என்று பாராமல் அந்தப் பணிகளை முடித்துத் தரும்படி வாரியம் சம்பந்தப்பட்ட பொறியாளர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி. கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாத் துறைகளுக்கும் முன்னுரிமை கொடுப்பதைப்போல—விவசாயத் துறை என்பது நம்முடைய உயிர்நாடிப் பிரச்சினையாக இருக்கிறது. விவசாயத்திற்கு மின் இணைப்பு இல்லாமல் விவசாயம் செய்ய இயலாது என்ற நிலை இப்போது நாட்டிலே நிலவி வருகிறது—விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடிய நம்முடைய அரசாங்கம், கிணறு எங்கே வெட்டினாலும் சரி, எந்த நேரத்திலே வெட்டினாலும் சரி, வெட்டிவிட்டு விண்ணப்பித்தவுடனே மின் இணைப்பு கொடுத்தால்தான் வேளாண்மைத் துறை சிறப்பாக இருக்கும். வேளாண் உற்பத்தி பெருக முடியும். ஆகவே, அந்த வகையிலே விண்ணப்பித்தவுடனே மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். இதுவரையிலே மின்சார பம்ப் செட்டுகள் இணைப்பு வேண்டுமென்று கேட்டவர்களுடைய எண்ணிக்கை *6* லட்சத்திற்கு மேல் இருக்கிறது. ஒரு ஆண்டுக்கு *40,000* விவசாயிகளுக்குத்தான் மின் இணைப்புக் கொடுக்கிறோம். இன்று ஒருவர், மின்சார வாரியத்திடம் மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால் குறைந்தது *15* ஆண்டுகளாவது அவர் மின்சார

இணைப்புப்பெற காலமாகும். இதையெல்லாம் பரிசீலனை செய்து விவசாயிகளுக்கு இன்னமும் எளிய முறையிலே மின்சாரம் வழங்குவதற்கு என்ன செய்யலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்றையதினம், வெளிநாட்டிலே இருக்கக்கூடிய டெக்னாலஜியை அடிப்படையாக வைத்து சூரிய வெப்பத்தினால் மின்சார பம்ப்செட்டுகளை இயக்குவதற்கு முடியுமா என்ற ஒரு முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அண்ணா மாவட்டத்திலே பரீட்சார்த்தமாக ஒரு திட்டம் 'சோலார் எனர்ஜி' மூலம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் 750 பம்ப்செட்டுகள் கடலோரப் பகுதியிலே அமைப்பதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி தந்திருக்கிறது. இந்த 'சோலார் எனர்ஜி' வெற்றிகரமாகிவிட்டால், அதற்குப் பிறகு தமிழ்நாட்டிலே விவசாயிகளுக்கு மின்சார வெட்டும் இருக்காது, பம்ப்செட் இல்லையே என்ற குறையும் இருக்காது. அதற்கு முயற்சிகளை இந்த அரசாங்கம் துரிதமாக எடுத்துக்கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76 நாளை எடுக்கப்படும்.

வினா எண் 77 இறுதியாக எடுக்கப்படும்.

வினா எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

78—

குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுது பார்த்தல்

***திரு. செங்கை சிவம் :**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில் உள்ள குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான பி.எஸ். மூர்த்தி நகர், சத்தியமூர்த்தி நகர், வியாசர்பாடி ஆகிய இடங்களிலுள்ள பழுது அடைந்த கட்டிடங்களைப் பழுதுபார்க்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?